இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100
1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 83 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – ஐப்பசி 17 – திங்கள்கிழமை 03 நவம்பர் 2025 – கோவை ★★ 16 + 8 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 84 - Issue 83 : Thiruvalluvar Year - 2056 - Ayppasi 17 - Monday 03 November 2025 - Kovai ★★ 16 + 8 Pages ₹5.00

## மோடி ஒன்றும் பேரரசர் அல்ல! கார்கே ஆவேசம்!



புதுடெல்லி, நவ. 3 -

'தமிழ்நாட்டை வெல்ல முடியாத மோடி ஒன்றும் பேரரசர் அல்ல' என்று காங்கிரஸ் தலைவர் கார்கே ஆவேசமாக தெரிவித்தார்.

குஜராத் மாநிலம் அகமதாபாத்தில் நடந்த சர்தார் வல்லபாய் படேலின் 150வது பிறந்தநாள் விழாவில் பிரதமர் மோடி பங்கேற்றது குறித்து காங்கிரஸ் தலைவர் கார்கே விமர்சனம் செய்தார்.

அவர் கூறுகையில்,

'படேலின் பிறந்தநாளைக் குறிக்கும் நிகழ்வில், அவர் ராஜா போல பிரிட்டிஷ் தொப்பியை அணிந்திருந்தார் என்பது எனக்கு விசித்திரமாக இருந்தது. அவருடன் குஜராத் முதல்வரும் இல்லை, ஒன்றிய உள்துறை அமைச்சரும் இல்லை.

அவர் ஒன்றும் பேரரசர் அல்ல. மற்ற கட்சிகள் பல மாநிலங்களில் ஆட்சியில் இருப்பதால் அவர் ஒரு பேரரசர் அல்ல. அனைத்து மாநிலங்களிலும் அவரது கட்சி ஆட்சியில் இருந்தால் தான் மோடி பேரரசர். தமிழ்நாடு, கேரளா, மேற்கு வங்கம், கர்நாடகா, தெலுங்கானா மற்றும் பல மாநிலங்களில் அவர் பேரரசர் அல்ல. அவர் தலைமையில் அமைந்துள்ள ஒன்றிய அரசுக்கு கூட பெரும்பான்மை இல்லை.

நிதிஷ் குமார், சந்திரபாபு நாயுடுவின் ஊன்றுகோலில் அரசாங்கத்தை நடத்துகிறார். நீங்கள் அவரை பேரரசர் என்று அழைக்கிறீர்கள். எனவே தவறுதலாக கூட அவரை பேரரசர் என்று அழைக்காதீர்கள்' என்று காங்கிரஸ் தலைவர் கார்கே தெரிவித்தார்.

## தெலங்கானா அமைச்சராக கிரிக்கெட் வீரர் அசாருதீன் பதவியேற்பு!



ஹைதராபாத், நவ. 3-

இந்திய அணியின் முன்னாள் கேப்டன் முகமது அசாருதீன் நேற்று தெலங்கானா அமைச்சராக பதவியேற்றார். அவருக்கு ஆளுநர் ஜிஷ்ணு தேவ் வர்மா பதவிப் பிரமாணம் செய்து வைத்தார்.

தெலங்கானா முதல்வர் ரேவந்த் ரெட்டி தலைமையிலான அமைச்சரவையில் முஸ்லிம் பிரதிநிதித்துவம் இல்லாத நிலையில், முகமது அசாருதீன் அமைச்சராக நியமிக்கப்படுவார் என பேசப்பட்டு வந்தது. இதை உறுதிப்படுத்தும் விதமாக, சட்டப்பேரவை உறுப்பினராக இல்லாத அவரை ஆளுநர் கோட்டாவில் சட்ட மேலவை உறுப்பினராக தேர்வு செய்ய தெலங்கானா அமைச்சரவை கடந்த ஆகஸ்ட் மாதம் ஆளுநருக்கு பரிந்துரை செய்தது. எனினும், இந்த பரிந்துரைக்கு ஆளுநர் இதுவரை ஒப்புதல் வழங்கவில்லை.

இந்நிலையில், அசாருதீன் அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளார். ஹைதராபாத்தில் உள்ள ஆளுநர் மாளிகையில் நடைபெற்ற இதற்கான விழாவில், ஆளுநர் ஜிஷ்ணு தேவ் வர்மா, அசாருதீனுக்கு பதிவிப் பிரமாணமும் ரகசிய காப்புப் பிரமாணமும் செய்து வைத்தார். இதில், முதல்வர் ரேவந்த் ரெட்டி, அசாருதீன் குடும்பத்தினர் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

தெலங்கானாவின் ஜூபிலி ஹில்ஸ் தொகுதிக்கு இடைத் தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ளதால், அதில் காங்கிரஸ் கட்சி சார்பில் அசாருதீன் போட்டியிடுவார் என எதிர்பார்க்கப்படுகிறது. 30%க்கு மேல் முஸ்லிம்கள் உள்ள தொகுதி என்பதால், அவருக்கான வெற்றி வாய்ப்பு பிரகாசமாக இருக்கும் என்றும் கூறப்படுகிறது.




சென்னையில், கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில், நேற்று (2.11.2025) சிறப்பு தீவிர வாக்காளர் பட்டியல் திருத்தத்திற்கு (S.I.R.) எதிராக போராடிட அனைத்துக் கட்சிக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி, கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி., தமிழ்நாடு மாநில காங்கிரஸ் கமிட்டி தலைவர் கு.செல்வப்பெருந்தகை, மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச் செயலாளர் வைகோ, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் பெ. சண்முகம், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் மு. வீரபாண்டியன், விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல். திருமாவளவன், இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தேசியத் தலைவர் பேராசிரியர் கே.எம்.காதர் மொகிதீன், மனிதநேய மக்கள் கட்சி தலைவர் எம்.எச்.ஜவாஹிருல்லா, மக்கள் நீதி மய்யம் தலைவர் கமல்ஹாசன், கொங்கு மக்கள் தேசியக் கட்சியின் தலைவர் ஈ.ஆர். ஈஸ்வரன், தமிழக வாழ்வுரிமைக் கட்சித் தலைவர் தி.வேல்முருகன் உள்ளிட்ட பல்வேறு கட்சிகளின் தலைவர்கள், கழக முதன்மைச் செயலாளர், அமைச்சர் கே.என்.நேரு, அமைச்சர் எ.வ.வேலு ஆகியோர் கலந்துகொண்டனர்.

### கிறித்தவர்களுக்கான அரசு பொது கல்லறைத் தோட்டங்கள் -

# இஸ்லாமியர்களுக்கான கபர்ஸ்தான்கள் அமைத்திட நிலம் ஒதுக்கீடு!

## உள்ளாட்சி அமைப்புகளிடம் முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆணைகளை வழங்கினார்!

சென்னை, நவ. 3 -

**முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (1.11.2025) தலைமைச் செயலகத்தில், பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப் பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறையின் சார்பில் விருதுநகர், தேனி, இராமநாதபுரம், திருவள்ளூர், பெரம்பலூர் மற்றும் சிவகங்கை மாவட்டங்களில் கிறித்தவர்களுக்கான அரசு பொது கல்லறைத் தோட்டங்கள் மற்றும் விருதுநகர், தேனி, திருவள்ளூர், பெரம்பலூர் மற்றும் சிவகங்கை மாவட்டங்களில் இஸ்லாமியர்களுக்கான அரசு பொது கபர்ஸ்தான்கள் அமைத்திட நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டு, அவ்விடங்களை சுற்றுச்சுவர், பெயர் பலகை மற்றும் தேவையான அடிப்படை வசதிகளை அமைத்து முறையாக பராமரிக்க உள்ளாட்சி அமைப்புகளிடம் வழங்கிடும் விதமாக அதற்கான ஆணையினை நகராட்சி ஆணையர்கள் மற்றும் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் ஆகியோரிடம் வழங்கினார்.**

கிறித்தவர்களுக்கான கல்லறைத் தோட்டங்கள், இஸ்லாமியர்களுக்கான கபர்ஸ்தான் இல்லாத மாவட்டத் தலைநகரங்களில் நிலம் கையகப்படுத்தப்பட்டு, மாநகராட்சி/நகராட்சி சார்பில் கல்லறைத் தோட்டம் / கபர்ஸ்தான் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று 9.1.2024 அன்று தலைமைச் செயலகத்தில், நடைபெற்ற சிறுபான்மையினர் நலன் குறித்த ஆலோசனைக் கூட்டத்தில் முதலமைச்சர் அவர்கள் தெரிவித்தார்.

அதன்படி, விருதுநகர் மாவட்டம் - கோட்டைபட்டி, தேனி மாவட்டம் - அல்லி நகரம், இராமநாதபுரம் மாவட்டம் - சக்கரக்கோட்டை , திருவள்ளூர்மாவட்டம் - திருப்பாச்சூர், பெரம்பலூர் மாவட்டம் - எளம்பலூர், சிவகங்கை மாவட்டம் - அரசணி ஆகிய இடங்களில் கிறித்தவர்களுக்கான அரசு பொது கல்லறைத் தோட்டங்கள் அமைக்கவும், விருதுநகர் மாவட்டம் - கோட்டைபட்டி, தேனி மாவட்டம் - அல்லி நகரம், திருவள்ளூர் மாவட்டம் - திருப்பாச்சூர், பெரம்பலூர் மாவட்டம் - எளம்பலூர், சிவகங்கை மாவட்டம் - அரசணி ஆகிய இடங்களில் இஸ்லாமியர்களுக்கான அரசு பொது கபர்ஸ்தான்கள் அமைக்கவும் இடம் ஒதுக்கீடு செய்யப்பட்டு, சுற்றுச் சுவர், பெயர் பலகை மற்றும் தேவையான அடிப்படை வசதிகளை அமைத்து முறையாக பராமரிக்க உள்ளாட்சி அமைப்புகளிடம் வழங்கிடும் விதமாக அதற்கான ஆணையினை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நகராட்சி ஆணையர்கள் மற்றும் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் ஆகியோரிடம் வழங்கினார். இந்நிகழ்வில், மேற்கண்ட மாவட்டங்களைச் சார்ந்த கிறித்தவ மற்றும் இஸ்லாமிய பிரதிநிதிகள் கலந்துக் கொண்டு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொண்டனர்.

இந்த நிகழ்ச்சியில், சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடுவாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் எஸ்.எம். நாசர், சிறுபான்மையினர் நல திட்டங்களுக்கான சிறப்புக் குழுவின் உறுப்பினர்கள் சட்டமன்ற உறுப்பினர் இனிகோ இருதயராஜ் மற்றும் சுபேர்கான், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை செயலாளர் திருமதி லட்சுமி பிரியா, சிறுபான்மையினர் நலத்துறை ஆணையர் திருமதி. மு.ஆசியா மரியம் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### "காலத்தின் நிறம் கருப்பு சிவப்பு தி.மு.க. – 75" எனும் அறிவுக் கருவூலத்தை

# கழகத்தினர் - இளைஞர்கள் படித்து பயனுற வேண்டும்!

## கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் வேண்டுகோள்!

சென்னை, நவ. 3-

**" 'காலத்தின் நிறம் கருப்பு சிவப்பு தி.மு.க. 75' எனும் அறிவுக் கருவூலத்தைக் கழகத்தினரும், இளைஞர்களும் படித்துப் பயனுற வேண்டும்" என்று கழகத் தலைவர் - முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளார்.**

இதுகுறித்து கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதள பதிவு வருமாறு:-

**முரசொலியில் வந்துள்ள அறிவிப்பு!**

**'முரசொலி' பாசறைப் பக்கம், சட்டமன்றத் தொகுதிதோறும் கலைஞர் நூலகம், முத்தமிழறிஞர் பதிப்பகம், இளம்பேச்சாளர்களைத் தேர்ந்தெடுத்துப் பயிற்சி என @dmk_youthwingஇன் கொள்கை விதைக்கும் பணியில் அடுத்த முயற்சி! வாழ்த்துகள் @UdhayStalin!**



**இந்தியாவிலேயே முதல் மாநிலக் கட்சியாக ஆட்சியமைத்த வரலாற்றைப் படைத்து, பவள விழா கடந்து நூற்றாண்டை நோக்கி நடைபோடும் நம் இயக்கம், அரசியல் - சமூகம் - பொருளாதாரம் - பண்பாட்டுத் தளங்களில் ஏற்படுத்தியுள்ள தாக்கங்கள் குறித்து பல்துறை அறிஞர்கள் 80 பேரின் எண்ணங்களைக் கட்டுரைகளாகப் பெற்று @MuthamilArignar உருவாக்கியுள்ள "காலத்தின் நிறம் கருப்பு சிவப்பு தி.மு.க.75" எனும் அறிவுக் கருவூலத்தைக் கழகத்தினரும் - இளைஞர்களும் படித்து பயனுற வேண்டும்!**

**கழகத் தோழர்களே...**

**இளைஞர்களின் கைகளுக்கு இந்த ஆவணத்தைக் கொண்டு சேர்ப்பீர்! அனைவரது சிந்தனையிலும் கருப்பு சிவப்புக் கொள்கைகள் ஆழமாக வேரூன்றட்டும்!**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.

